பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 08 புதன்கிழமை 22.06.2022 கதிர் 229

### இனி இது ரகசியம் அல்ல!

வடக்கு மாகாண ஆளு நருக்கும், யாழ். மாநகர முதல்வருக்கும் இடையிலான பனிப்போர் ஓய்ந்த பாடில்லை. நேற்றும் ஒரு பொது நிகழ்வில் 'மணி வந்திருப்பதால் நான் வர மாட்டேன்' என்று ஆளுநர் அடம் பிடித்தார் என அறியக் கிடைத்தது. 2

# போராடும் சிங்கள இளைஞர்களுக்கு ஒரு நீதி; தமிழ இளைஞர்களுக்கு மட்டும் வேறு நீதியா?

## விசுவமடுவில் இராணுவம் காட்டுமிராண்டித்தனம் என்கிறார் சிறிதரன் எம்.பி.

கொழும்பு, ஜூன் 22


தென்னிலங்கையில் சிங்கள இளைஞர்கள் போராடும்போது, அவர்களைத் தமது பிள்ளைகளாகப் பார்க்கும் அரசு தமிழ் இளைஞர்களுக்கு எதிராக இராணுவம் மூலம் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை மேற்கொள்கின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட எம்.பி. சிவஞானம் சிறிதரன் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குற்றவியல் நடவடிக்கை கோவை திருத்தச் சட்டமூல விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றஞ் சாட்டினார். அவர் மேலும் பேசுகையில் –

கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களுக்கு எரிபொருள் வழங்கப்படாத நிலையில் இரவு 7.30 மணியளவில் வரிசையில் காத்திருந்தவர்களில் ஒருவரான மனநலம் குன்றிய 2

# ஜனாதிபதி முறையை நீக்கினால் சமஷ்டி உருவாகிவிடும் பேரபாயம்

## நாடாளுமன்றில் சரத் வீரசேகர எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 22

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் நடைமுறையில் இருக்கும் வரை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்தக்கூடாது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கினால், சமஷ்டி முறைமை உருவாகும் அபாயம் உள்ளது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சரத் வீரசேகர நேற்று நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்தார். 2

# பண வீக்கம் மிக மோசம்

இலங்கையின் வரலாற்றில் அதிகபட்ச பணவீக்க விகிதம் 2022 மே மாதத்தில் பதிவாகியுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மூலம் கணக்கிடப்பட்ட மே மாதத்துக்கான பணவீக்கம் 45.3 வீதமாக அதிகரித்துள்ளது என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிக்கையிட்டுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கு அமைய 2022 மார்ச் மாதம் 21.5 வீதமாக இருந்த பணவீக்கம் 2022 ஏப்ரலில் 33.8 வீதமாக அதிகரித்திருந்த நிலையில் மே மாதத்தில் 45.3 வீதமாக அதிகரித்துள்ளது.

இதேவேளை, 03

# எதிரணியின் '21'ஐ நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு அவசியம்

## உயர்நீதிமன்ற முடிவு நேற்று அறிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார நாடாளுமன்றில் தனிநபர் சட்ட மூலமாக சமர்ப்பித்த அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்ட வரைவின் சில சில சரத்துக்கள் அரசமைப்பின் பிரதான அடிப்படைகளுக்கு முரணாக அமைந்துள்ளமையால் அவற்றை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்று உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளது.

இந்த சட்ட வரைவு தொடர்பில் உயர்நீதிமன்றின் வியாக்கியானம் நேற்று 2

# இன அழிப்பின் சிந்தனையாகவே குருந்தூர்மலையில் புத்தர் சிலை

## சபையில் சார்ள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு



தமிழ் மக்களின் விவசாயக் காணிகளை அபகரிக்கும் அரசு சிங்கள மக்களுக்கு மட்டுமே விவசாயம் செய்யும் உரிமையை வழங்க முயற்சிப்பதாகக் குற்றஞ் சாட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன், இன அழிப்பின் சிந்தனையாகவே குருந்தூர் மலையில் புத்த பகவான் சிலையை நிறுவும் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாகவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் 03

# சர்வதேச யோகா தின நிகழ்வில் பிரதமரும் பல அமைச்சர்களும்



இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் எட்டாவது சர்வதேச யோகா தின நிகழ்வுகள் நேற்றுக் காலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம் பெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பல அமைச்சர்கள், மத குருமார் என பல நூற்றுக்கணக்கானோர் 2

# எதிரணியினர் இவ்வாரம் சபைப் பகிஷ்கரிப்பு நாடாளுமன்ற அமர்வும் இன்றுடன் நிறுத்தம்!

இவ்வாரத்துக்கான நாடாளுமன்ற அமர்வு நாள்கள் குறைக்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் இவ்வாரம் இன்றைய தினத்துடன் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படும். நாளையும் மறுதினமும் (வியாழன், வெள்ளிக்கிழமைகளில்) நடைபெற வேண்டிய அமர்வு இம்முறை நடக்காது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டே இவ்வாறான தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதாயினும், பிரதான எதிர்க்கட்சிகள் இவ்வாரம் முழுவதும் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்க 03

# தம்மிக்க பெரேரா எம்.பியாகின்றமையை தடுக்கக் கோரும் மனுக்கள் நிராகரிப்பு



தம்மிக்க பெரேரா நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி ஏற்பதைச் சவாலுக்கு உட்படுத்தும் வகையில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

அந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதில்லை என்ற முடிவை மூன்று நீதியரசர்கள் கொண்ட ஆயம் 2 – 1 ஆகப் பிரிந்து எடுத்துள்ளது.

இந்த ஐந்து மனுக்களையும் விசாரணைக்கு ஏற்பதா என்பது குறித்து உயர்நீதிமன்றம் நேற்று முன்தினமும் நேற்றும் ஆராய்ந்த பின்னர் இந்த முடிவை நேற்று மாலை அறிவித்தது.

அண்மையில் 03

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவம் இதுதான். யாழ்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் அனைத்துலக யோகா தின நிகழ்வு நேற்று இந்திய கலாசார கட்டடத் தொகுதியின்திறந்தவெளியரங்கில்இடம்பெற்றது. வழக்கம் போல துணைத் தூதரகத்தின் பிரமுகர்கள் பட்டியலில் உள்ள அனைவருக்கும் அழைப்பு.

அழைக்கப்பட்ட அனைவரும் நிகழ்வுக்கு வருகிறார்களா என்று தூதரக அதிகாரிகள் நேற்று முன்தினம் தொலைபேசி வாயிலாக உறுத்திப்படுத்தியுமிருந்தனர்.

நேற்றுக் காலை 7.30 மணிக்கு நிகழ்வு திட்டமிடப்பட்டிருந்தது. இந்தியத் துணைத் தூதரகத்தின் நிகழ்வுகள் அனைத்தும் குறித்த நேரத்துக்கு ஆரம்பிக்கப்பட்டு விடும். யார் வந்தார் – எவர் வரவில்லை என்றெல்லாம் வந்தவர்களைக் காத்திருக்க வைப்பது வழமையில்லை. அத்தோடு இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் ஒரே சமயத்தில் நடத்தப்படும் நிகழ்வு இது. அதுவும் பிரதமர் மோடியின் நேரடிக் கண்காணிப்பில், அவரது சிந்தையில் உதித்த எண்ணத்தின் அடிப்படையில் நடக்கும் நிகழ்வு. கொழும்பிலிருந்து மட்டுமல்லாமல், புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சு மற்றும் பிரதமர் அலுவலகம் எல்லாம் கழுகுக் கண்ணோடு நோட்டமிடும் என்பதால் கனகச்சிதமாக அதை உரிய முறையில் நடத்தி முடிப்பதில் தூதரகத் தரப்பு மிக மிக அவதானமாக இருந்தது.

ஆனால் நேற்று வடக்கு ஆளுநர் வருவார் என்ற நம்பிக்கையோடு அரை மணித்தியாலம் வரை தாமதம். காத்திருந்தனர் தூதரக அதிகாரிகள். 8.00 மணி வரை வருகிறார், வருகிறார் என்று சொல்லப்பட்ட ஆளுநர் பிறகு வரவேயில்லை. மாநகர முதல்வர் இருக்கின்ற இடத்துக்கு வர மாட்டார் ஆளுநர் என்று அவரது அலுவலக வட்டாரங்கள் கைவிரித்து விட்டனவாம். அதன் பின் வேறு வழியின்றி நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இருவருக்கிடையிலானபனிப்போரால் வந்திருந்த பிரமுகர்கள், விருந்தினர்கள் மற்றும் யோகா கண்காட்சியை வழங்க வந்திருந்த மாணவர்கள் உட்பட பல நூற்றுக் கணக்கானோர் காத்திருக்க வேண்டியதாயிற்று.

ஏற்கனவே ஆரியகுள விடயத்தில் ஆளுநருக்கும், முதல்வருக்கும் இடையில் சிண்டை முடிந்து விட்டது அதிகாரிகள் வர்க்கம் என்று ஒரு பேச்சுண்டு. அது பற்றி எழுதுவதானால் நீண்ட பாரதமாகி விடும். பிறிதொரு சந்தர்ப்பத்தில் அதை விரிவாகப் பார்ப்போம்.

ஆனாலும் ஒரு சிறிய அட்வைஸ். அரசியல் உயர்பதவிகளில் இருப்போர் அதிகாரிகளின் நெளிவுசுழிவுகள் குறித்து அவதானமாக இருப்பது எப்போதும் நல்லது.

அவர்களைப் பொறுத்தவரை அரசியல் பதவி வகிப்போர் வருவார்கள், போவார்கள். எதுவும் செய்து விட்டுப் போய்விடுவார்கள். அவர்கள்தான் (அதிகாரிகள் வர்க்கத்தினர்தான்) தங்களையும் தங்கள் கதிரைகளையும் வேலையையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஆகவே அவர்கள் அப்படித்தான் நடப்பார்கள். நடக்க வேண்டும். அரசியல் தரப்போடு சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்பதற்காக முழு விசுவாசமாகி விடமாட்டார்கள். அதைக் கவனித்து, கணக்கில் எடுத்துச் செயற்படுவது அரசியல் பதவி வகிப்போரின் பொறுப்பு.

சர்வதேச யோகா தினம் என்றதும் இன்னொரு விடயம் நினைவுக்கு வருகிறது. அதையும் குறிப்பிட வேண்டும். இன்று கொழும்பில் நடந்த சர்வதேச யோகா தின நிகழ்வில் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே மிஸ்ஸிங். படங்களில் அவரின் தலையைக் காணவில்லை. சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் என்ன, ஏது என்று விசாரித்தேன். அவர் திடீரென புதுடில்லி விரைந்து இருக்கிறார் எனக் கூறப்பட்டது. ஏன் தெரியுமா? இலங்கைக்கு இந்தியா வழங்கிய அவசர கடனுதவிகள் முழுதாகப் பெரும்பாலும் பாவித்து முடிக்கப்பட்டுக் கரைந்து விட்டன. தொடர்ந்தும் – மேலும் – உதவி கேட்டிருக்கிறது ரணில் – கோட்டா அரசு. அந்த உதவிகள் பற்றி புதுடில்லித் தலைமையுடன் விரைந்து பேசி முடிவெடுப்பதற்காகவே கொழும்புக்கான இந்தியத் தூதுவர் திடுதிப்பென புது டில்லி பறந்திருக்கின்றார் என உள்வீட்டுத் தகவல்கள் தெரிவித்தன.

எல்லாம்சரி. இந்தியாவிடம்அவ்வளவு தொகை உதவிகளை, அதுவும் சமய சந்தர்ப்பம் பாராது நெருக்கடியான கட்டத்தில் எல்லாம் கொழும்பு பெற்று வருகிறது. அந்த நட்புறவுக்கு விசுவாசமாக – நன்றியுடையதாக – கொழும்பு ஆட்சிப் பீடம் இருக்குமா? எனக்கென்னவோ நம்பிக்கை இல்லை. கொழும்பைச் சரியாகக் கட்டிப்போடுவதற்குரிய வழிவகைகளை புதுடில்லி முற்கூட்டியே பார்த்துக் கொள்வது நல்லது. ஒப்பந்தங்கள் செய்வதும், வாக்குறுதி கொடுப்பதும், பின்னர் அவற்றை முழுமையாக மீறுவதும் கொழும்பின் பரவணிப் பழக்கம் என்பது தமிழர்களின் அனுபவம். புதுடில்லிக்கும் அந்த அனுபவங்கள் ஏற்கனவே தாராளமாக உண்டு.

★ ★ ★

தெல்லிப்பளையில் பூசாரியின் வரவிற்காக 40 சைக்கிள்கள் காத்துக் கிடக்கின்றன என பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர் என்று என் செய்தியாளர் ஒருவர் குறை கூறுகின்றார்.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் ஊடாக பனை, தென்னை உற்பத்தியாளர்களுக்கான ஊக்குவிப்பிற்காக வழங்குவதற்கு 2021ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டில் இருந்து 40 சைக்கிள்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

அவை இளவாலையில் உள்ள ப.தெ.வ. சங்கத்திடம் கையளிக்கப்பட்ட போதும் பயனாளிகளிடம் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை.

40சைக்கிள்கள்களும்5மாதங்களாக தூக்கிக் கொடுப்பார் இன்றி காவல் கிடக்கின்றன. இதனைவழங்குவதில்அரசியல் போட்டியேகாரணம்எனவும்பயனாளிகள் விசனப்படுகின்றனர்.

ப.தெ.வ.சங்கத்தின் களஞ்சியத்தில் சைக்கிள்கள் உள்ளபோதும் அவை இன்று வரை தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் பொறுப்பிலேயே உள்ளன எனக் காட்டப்படுகின்றன எனவும் தகவல்.

தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு காலத்திலும் இவ்வாறு 40 சைக்கிள்கள் யாரின் வரவிற்காக காத்திருக்கின்றன எனத் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சிவசிறியை தொடர்பு கொண்டு கேட்ட போது –

40 சைக்கிள்கள்களும் களஞ்சியத்தில் இருப்பது உண்மை, இவற்றை விரைவில் வழங்க ஆவன செய்யப்படும் என அவர் பதிலளித்தார்.

நிர்வாகத்தில் மதிப்பும் பாராட்டும் பெற்ற அதிகாரி அவர். நிச்சயம் கவனிப்பார் என உறுதியாக நம்பலாம்.

– மின்னல் –

---

## ஜனாதிபதி முறையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், 19ஐ அடியொட்டியதாக முன்வைக்கப்படும் 21 ஆவது திருத்தச் சட்டமூலத்தைத் தாம் ஆதரிக்க போவதில்லை எனவும் அவர் சபையில் அறிவித்தார்.

புதிய அரசமைப்பை நடைமுறைப்படுத்தவே ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை வழங்கினர். இது தொடர்பில் நிபுணர்கள் குழுவின் அறிக்கையும் முன்வைக் கப்பட்டுள்ளது. இந்நிலையில் 21 தேவையற்றதொன்றாகும். – என்று நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் 52 வீதமான தமிழ் மக்கள், சிங்களவர்கள் மத்தியில்தான் வாழ்கின்றனர். தமிழ் மக்களுக்கு எப்பகுதியிலும் வாழ முடியுமெனில், சிங்கள மக்களுக்கும் தாம் விரும்பிய இடத்தில் வாழும் உரிமை உள்ளது என்பதை கூட்டமைப்பினர் நினைவில் கொள்ள வேண்டும்.

குருந்தூர்மலையில் புதிய கட்டடம் நிர்மாணிக்கவே தடை விதிக்கப்பட்டுள்ளது. இங்கு புனரமைப்பு பணிதான் இடம்பெற்றது. இங்கு 2,500 வருடங்கள் பழமையான தொல்லியல் அடையாளங்கள் இருந்துள்ளன. அவற்றை மறைக்க முடியாது. ஊர் மக்கள் எதிர்க்கவில்லை. யாழ்ப்பாணம், மன்னார் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தே குண்டர் குழுக்கள் கொண்டுவரப்பட்டு, எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. – எனவும் சரத் வீரசேகர குறிப்பிட்டார்.

(மற்றொரு செய்தி 04ஆம் பக்கத்தில்...)

---

## போராடும் சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுமகன் ஒருவர் அங்கிருந்தவர்களிடம் முரண்பட்ட நிலையில் அங்கு வந்த விசுவமடு 572 ஆம் படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர் குறித்த பொதுமகனை தமது முகாமுக்கு இழுத்துச் சென்று பொல்லுகளாலும் ஆயுதமுனைகளாலும் பலமாகத் தாக்கி இரத்தக்காயங்களை ஏற்படுத்தியிருந்தனர்.

இதனை அவதானித்த அதே பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இராணுவக் காவலரணுக்கு அருகே சென்று குறித்த பொதுமகனைத் தாக்கியமைக்கான காரணத்தைக் கேட்டபோது இராணுவத்தினர் அவர்களையும் அச்சுறுத்தி வெளியேற்றியுள்ளனர். அதன்பின்னர் இரு கனரக வாகனங்களில் பொல்லுகளோடும் கூரிய ஆயுதங்களோடும் அழைத்துவரப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான இராணுவத்தினர் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த பெண்கள், முதியவர்கள் மற்றும் இந்தச் சம்பவத்தோடு எவ்வித தொடர்புமற்ற வீதியால் சென்றவர்கள் உட்பட நூற்றுக் கணக்கான பொதுமக்களை மிக மோசமாகத் தாக்கியுள்ளனர்.

இதில் 6 பேர் இராணுவத்தினரின் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். செல்வராசா ஸ்ரீகாந்தன் (வயது43),மயில்வாகனம்ஜெகதீஸ்வரன் (வயது 37), சசிகுமார் விதுன் (வயது 25), ஜெகதீஷ் நடராஜா (வயது 36), மலையாண்டி ஜினோகரன் (வயது 43) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் கைவிலங்கிடப்பட்டு கிளிநொச்சி, முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுப்பொலிஸாரின்கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அன்றாட சீவியத்துக்காக, விவசாயத்துக்காக நாள் முழுதும் எரிபொருளுக்காகக் காத்திருந்த மக்கள் மீது காரணமின்றி இராணுவத்தினர் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதலை மேற்கொண்டுள்ளமை அப்பகுதி மக்களிடையில் பாரிய அதிருப்தியையும் அதியுச்ச கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக பிரமானந்தமாறு பிரதான வீதியின் 3 இடங்களிலும், விசுவமடு சந்நிதியிலும் சமபவம் இடம்பெற்ற இராணுவ காவலரண் முகாமுக்கு அருகிலும் அதிகளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு மக்களை அச்சுறுத்தும் வகையிலான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதித்துள்ளது.

எனவே, சமூக வன்முறைகளுக்கு வழிகோலும் வகையிலும் மனிதாபிமானமற்ற முறையிலும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் சமப்வத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கும் பொதுப் பயன்பாட்டு இடங்களில்இராணுவத்தலையீடுகளைத் தவிர்ப்பதற்கும் துரித நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இந்த உயர்ந்த சபையினூடாக ஜனாதிபதியையும் சமபந்தப்பட்ட அமைச்சரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நாட்டிலே காலிமுகத்திடலிலும் ஒரு போராட்டம் நடக்கின்றது. தென்பகுதியிலுள்ள சிங்கள இளைஞர்கள் போராட்டங்கள்நடத்துகின்றார்கள். பொலிஸாரின் காவலரண்களைத் தள்ளுகின்றார்கள். இராணுவத்தினரைத் தள்ளுகின்றார்கள்.

இலங்கையில் சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் தனித்தனி சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தென்னிலங்கையில் சிங்கள இளைஞர்கள் போராடும்போது, அவர்களை உங்களது பிள்ளைகளாகப் பார்க்கின்றீர்கள். தமிழர்களை மாற்று முகமாகப் பார்க்கின்றீர்கள்.

நாடு முழுவதும் மக்கள் எரிபொருளுக்காக தெருக்களில் காத்திருக்கின்றார்கள். நான் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் வரையில் வீதிகள் எல்லாம் திருவிழாக்கள் போல் 3, 4 நாள்களாக எரிபொருளுக்காக மக்கள் காத்திருக்கின்றார்கள் – என்றார்.

---

## எதிரணியின் '21'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவினால் அறிவிக்கப்பட்டது.

இதன்படி குறித்த வரைவின் சில சரத்துக்கள் சாதாரண மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சில சரத்துக்கள் அரசமைப்பின் பிரதான அடிப்படைகளுக் முரணாக அமைந்துள்ளமையால் அவற்றை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்று உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை முழுமையாக நீக்கும் விதத்தில் இந்த வரைவு அமைந்திருந்தமை தெரிந்ததே.

---

## சர்வதேச யோகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைதி ஒழுங்குடன் இதில் பங்கு பற்றினர்.

(விரிவானசெய்தி06ஆம்பக்கத்தில்...)



காலைக்கதிர்
Kalaikkathir

# முப்பது வருடங்களின் பின்பு

# ஆஸ்திரேலியாவைப் பந்தாடி தொடரை வென்ற இலங்கை!

## சொந்த மண்ணில் சாதனை

சுமார் முப்பது வருடங்களின் பின்பு ஆஸ்திரேலியா அணிக்கு எதிரான தொடரை சொந்த மண்ணில் வென்று சாதனை படைத்தது இலங்கை அணி.

இலங்கை மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற நான்காவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதற்கமைய, போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை அணி சார்பாக சரித் அசலங்க 110 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 60 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

ஆஸ்திரேலியா அணியின் பந்து வீச்சில் குஹேனெமன், பெட் கம்மின்ஸ் மற்றும் மிச்சல் மார்ஷ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்கள் வீதம் வீழ்த்தினர்.

இதையடுத்து, 259 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 254 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

ஆஸ்திரேலியா அணி சார்பாக டேவிட் வோனர் 99 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார்.

அதற்கமைய, 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் இலங்கை அணி 3 இற்கு 1 என்ற கணக்கில் முன்னிலைப் பெற்றுள்ளதோடு, ஒரு போட்டி மீதமிருக்கத்தொடரையும்கைப்பற்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.










### இன அழிப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று நடைபெற்ற குற்றவியல் நடவடிக்கை கோவை திருத்தச் சட்டமூல விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டிய அவர் மேலும் பேசுகையில்,

1932ஆம் ஆண்டு குருந்தூர்மலை தொல்லியல் இடம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டது. ஆனால், 2020 ஆம் ஆண்டு குருந்தூர்மலை தேவ விகாரை எனக் கூறிய புத்தர் சிலை வைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. சிங்களவர்கள் இல்லாத, பௌத்தர்கள் இல்லாத இங்கு புத்தர் சிலை வைப்பதன் முக்கிய நோக்கம் சிங்களக் குடியேற்றம் மட்டுமே. இதனைத் தற்போதைய நெருக்கடியில் இலங்கைக்கு உதவும் நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும்.

தண்ணிமுறிப்பு மக்கள் 78 ஆண்டுகளாக விவசாயம் செய்து வரும் விவசாயக் காணிகளை ஆக்கிரமிக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

1956 - 1957 ஆண்டு காலப்பகுதியில் அவ்வப்பிரதேச செயலகங்கள் ஊடாகவே இந்தக் காணி உரிமைகள் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அதனையே தற்போது ஆக்கிரமிக்க முயற்சிக்கப்படுகின்றது.

தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில்அனைத்து மக்களையும் விவசாயம் செய்யுமாறு கூறும் அரசு தமிழ் மக்களின் விவசாயக் காணிகளை மட்டும் அபகரிக்கப் பார்க்கின்றது. இதன்மூலம் சிங்கள மக்கள் மட்டுமே விவசாயம் செய்ய வேண்டும் என்று அரசு நினைக்கின்றது.

இதேவேளை, 'கோட்டா கோ கம' போராட்டக்காரர்கள் குருந்தூர்மலை புத்தர் சிலை விவகாரத்தை கருத்தில் எடுக்காமல் இருப்பது ஏன்? அவர்களின் போராட்டம் உணவுக்கும் எரிபொருளுக்கும் மட்டும்தானா? தமிழர்களின் இனம் அழிக்கப்படுகின்றது. நிலம் பறிக்கப்படுகின்றது. கலாசாரம் சிதைக்கப்படுகின்றது. இவை தொடர்பிலும் 'கோட்டா கோ கம' போராட்டக்காரர்களும் இலங்கைக்கு உதவும் நாடுகளும் கவனத்தில்கொள்ள வேண்டும் – என்றார்.

### பண வீக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசியநுகர்வோர்விலைச்சுட்டெண்ணின்படி, உணவுப் பணவீக்கம் 58 சதவீதமாகவும், உணவு அல்லாத பிரிவின் வருடாந்த பணவீக்கம் 34.2 சதவீதமாகவும் காணப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

### எதிரணியினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடிவெடுத்த பின்னரே இப்படி எஞ்சிய இரு நாள்களுக்குமான அமர்வுகளை நிறுத்தும் முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இந்த முடிவால், எதிர்க்கட்சிகளினால் அறிவிக்கப்பட்ட ஒரு வார நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பு என்பது ஆக இன்று ஒரு நாளுடன் முடியப் போகின்றது.

ஆளும் தரப்பின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமனம் பெற்றுள்ள தம்மிக பெரேரா பதவிப் பிரமாணம் செய்ய வசதியாக இன்றைய அமர்வு மட்டும் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

### தம்பிக்க பெரேரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிற்குப் பதிலாக தம்மிக்க பெரேரா தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தம்மிக்க பெரேராவை நியமிப்பதற்கான வர்த்தமானி ஜூன் 10ஆம் திகதி வெளியிடப்பட்டது.

மேற்படி வழக்கில் மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகள் சுரேன் பெர்ணாண்டோ, வீரயன் கொரேயா, ஜெஃப்ரி அழகரட்ணம் ஆகியோரும், எதிர்மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, காமினி மாரம்பே ஆகியோரும் முன்னிலையாகி வாதாடியிருந்தனர்.

நீதிமன்றத் தீர்ப்பையடுத்து தம்மிக்க பெரேரா இன்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி பிரமாணம் செய்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## திருத்தப்படாத தீர்ப்பு

**நாட்டின் மீயுயர் சட்டம் அரசமைப்பு.**

**அதன் வாசகங்களை வியாக்கியானப்படுத்தும் தனித்துவமானதும் பிரத்தியேகமானதுமான உரிமை நீதித்துறையின் மிக உயர்நிலை நீதிமன்றமான உயர்நீதிமன்றத்துக்கே உண்டு.**

**நீதியரசர்களின் தனித்துவப் பார்வையில் – நீதிமன்ற அமர்வு ஆயங்களின் நோக்கில் – வித்தியாசமான, வேறுபட்ட, பிறழ்வான அர்த்தப்படுத்தல்கள் வருவது வழமைதான்.**

**எனினும் தீர்ப்புகள் திருத்தப்படலாம் என்ற கருத்தியலில், சட்டப் பார்வைகள் விரிவடையும் போது, விடப்பட்ட தவறுகள் சீர்செய்யப்படும் என்று நம்பிக்கைகள் பிறப்பதுண்டு.**

**தம்மிக்க பெரேரா, மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட முறைமையிலும், முன்னர் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் பார்வைகள் திருத்தப்படலாம் என்ற நம்பிக்கை சில நீதி மற்றும் சட்டத்துறை வட்டாரங்களில் இருந்தன. ஆனால், உயர்நீதிமன்றத்தின் நேற்றைய தீர்ப்பில் – 'கஸினோ' மன்னரும், கோடீஸ்வரருமான தம்மிக்க பெரேராவிற்கு எதிரான வழக்குகளை விசாரணைக்கு ஏற்பதில்லை என்ற நீதிமன்ற முடிவினால் – அந்த நம்பிக்கைகள் தகர்ந்து போய்விட்டன.**

**பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடாமல், அதனை எதிர்த்துப் போட்டியிட்ட சரத் பொன்சேகாவுக்கு, தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசிய முன்னணியில் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை அப்போதைய ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை வழங்கிய போது அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்துக்கு மனுச் செய்யப்பட்டது.**

**பின்னாளில் பிரதம நீதியரசரான ஸ்ரீபவனையும் கொண்ட மூன்று நீதியரசர்களின் ஆயம் அந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்காமல் ஏகமனதாக நிராகரித்தது. மூன்று நீதியரசர்களும் ஒரே முடிவை எடுத்தனராயினும் வழமை போல மனுக்களை நிராகரிப்பதற்கான காரணம் விரித்துக் காட்டப்படவில்லை.**

**இப்போது தம்மிக்க பெரேராவுக்கு எதிரான வழக்கில் சற்று முன்னேற்றம். அதில் (சரத் பொன்சேகா விவகாரத்தில்) மூன்று நீதியரசர்கள் ஒரே பக்கமாக மனுவை விசாரணக்கு ஏற்பதில்லை எனத் தீர்ப்புத் தந்தனர். இதில் (தம்மிக்க பெரேரா வழக்கில்) நீதியரசர்கள் 2 – 1 ஆகப் பிரிந்து மனுக்களைத் தள்ளுபடி செய்திருக்கின்றனர்.**

**நீதியரசர்கள் பிரியந்த ஜயவர்த்தனா, அர்ஜுனா ஒபய சேகர ஆகியோர் மனுக்களை விசாரணைக்கு ஏற்காமல் நிராகரிக்கும் முடிவை எடுக்க, நீதியரசர் யஸந்த கோட்டாகொட அதற்க மாறான முடிவை எடுத்திருக்கின்றார்.**

**ஆக, இயற்கை நீதியின் திசையில் ஒரு சிறிது முன்னேற்றம், 3 – 0 என்ற நீதியரசர்களின் தீர்மானம், இப்போது 2 – 1 என்ற அடிப்படையில் முன்னேறியிருப்பதாகக் கொள்ளலாம்.**

**வழக்குகள், சர்ச்சைகள், பிணக்குகளின் அடிப்படை ஒன்றானாலும், நீதியசர்களின் பார்வைகளும், கருத்து நிலைகளும் வேறுபட்டு நிற்கின்றமை கண்கூடு. அவற்றுக்கான காரண காரியங்களை நாம் தேடப் புகுவதோ, வெளிப்படுத்தி விமர்சிப்பதோ, நீதித்துறையில் தலையீடு செய்வதாக அர்த்தப்படுத்தப்பட்டு தேவையில்லாத வினைகளை வாங்கித் தந்து விடும். அதனால் விட்டு விடுவோம்.**

**ஆனால் ஒன்று. காரணங்கள், விளக்கங்கள், வியாக்கியானங்கள் கூறப்படாமல் வழங்கப்படும் மீயுயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், பொது வெளியில் விமர்சிக்கப்பட முடியாதவை என்ற முறையற்ற கட்டுப்பாடு, இறுதியில் நீதித்துறை சீரழிவுக்கே வழி வகுக்கும் என்பதையும் எவரும் மறந்து விடக் கூடாது.**

## சிங்கள மக்களின் பொறுமைக்கு எல்லை உண்டு கூட்டமைப்பினரை எச்சரித்தார் சரத் வீரசேகர!



இலங்கையில் சிங்கள மக்களின் பொறுமைக்கு எல்லை இருப்பதாகவும், அதனை கேலிக்குட்படுத்தவேண்டாம் எனவும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க் கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர், முல்லைத்தீவு – குருந்தூர் மலையில் புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்வதற்கு எதிர்ப்பு வெளியிட்டமையை தாம் கண்டிக்கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிரபாகரனின் கட்சி எனவும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கோணகல கிராமத்தில் 54 சிங்களவர்கள் கொல்லப்பட்டபோது, கொழும்பில் இந்து மத வேல் திருவிழா இடம்பெற்றிருந்ததாகவும் அவர் கூறினார்.

எனினும் வடக்கில் பௌத்த நடைமுறைகளுக்கு கௌரவம் வழங்கப்படவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் நாகவிஹாரையில் புத்த பெருமான் சிலையை நிறுவுவதற்கும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இந்தநிலையில், குருந்தூர் மலையில் கண்டெடுக்கப்பட்ட சின்னங்கள் பல நூற்றாண்டுளுக்கு முற்பட்ட பௌத்த சின்னங்களாகும்.

கடந்த 9 ஆம் திகதி குருந்தூர் மலையில் புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும் வினோநோகராதலிங்கம் ஆகியோர் பாரிய தடைகளை ஏற்படுத்தினர்.

இவர்களால், அழைத்து வரப்பட்டவர்கள் கிராம மக்கள் அல்லர் என குற்றம் சுமத்திய அவர், அவர்கள் ஏனைய பகுதிகளில் இருந்து அழைத்துவரப்பட்டவர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜோன்ஸ்டன் தாக்கல் செய்த ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்றால் நிராகரிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தாக்கல் செய்த ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் தம்மை கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றை ஜோன்ஸ்டன் தாக்கல் செய்திருந்தார்.

இந்தநிலையிலேயே மேற்படி மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மே 9ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களால், காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகைக்கு முன்பாக அமைதி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த சம்பவத்தின் சந்தேகநபராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பெயரிடப்பட்டுள்ளமையுடன், அவரை கைது செய்வதற்கான உத்தரவை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்திருந்தது.

இதனை அடுத்து அவர் தாம் கைது செய்யப்படுவதை தடுக்கக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவின் அடிப்படையில் அவரை நீதிமன்றில் சரணடைய மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் சரணடைந்த அவருக்கு அன்றைய தினமே பிணை வழங்கப்பட்டிருந்தது.

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு பதிவு



அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

'உயிர்த்தெழுதல் – நீதியின் மக்கள்' அமைப்பின் பிரதிநிதிகள் பங்கேற்புடன் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 11 மணிக்கு இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அண்மையில் மகா சங்கத்தினருக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டை உடனடியாக விசாரணை செய்யுமாறு இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த மே 9 ஆம் திகதி இடம்பெற்ற கலவரத்துக்கு பின்னால் பௌத்த விகாரைகளும் கிறிஸ்தவ ஆலயங்களுமே இருந்தன என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

சம்பவ தினத்தன்று சோபித தேரர், கர்தினால் ஆகியோர் அங்கிருந்து கொண்டு இவர்களை தாக்குங்கள் என்றே தெரிவித்தனர் எனவும், சில ஆலயங்களில் மணி ஒலிக்கச் செய்து மக்களை ஒன்று திரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறியிருந்தார்.

அத்துடன், இந்தத் தாக்குதலின் பின்னணியில் விகாரைகள் மாத்திரம் அல்ல, கிறிஸ்தவ ஆலயங்களும் இருக்கின்றன.

நான் இவ்வாறு தெரிவிப்பதால் எனக்கு எதிராக செயற்படுவார்கள். அது தொடர்பில் நான் அச்சப்படவில்லை எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டிருந்தார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

## நாளொன்றுக்கு வழங்கப்படும் கடவுச்சீட்டு எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரிப்பு!

கொழும்பு, ஜுன் 22

நாளொன்றுக்கு வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

சராசரியாக ஒரு நாள் சேவையின் கீழ் சுமார் 800 கடவுச்சீட்டுகள் முன்னர் வழங்கப்பட்டன என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், ஒரு நாள் சேவையின் கீழ், வழங்கப்பட்ட கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை தற்போது 3 ஆயிரத்திலிருந்து 3 ஆயிரத்து 500 ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், வழமையான முறையின் கீழ் ஒரு நாளைக்கு 600 கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டன எனவும், தற்போது அந்த எண்ணிக்கை ஆயிரத்து 200 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியா முழுவதும் சர்வதேச யோகா தின நிகழ்வுகள்

# மைசூரு அரண்மனை வளாகத்தில் பிரதமர் மோடி யோகா நிகழ்வில்!





சர்வதேச யோகா தினம் நேற்று (ஜுன் 21) உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. 'மனித நேயத்திற்காக யோகா' என்ற கருத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு யோகா தினம் அமைந்தது. மைசூரு அரண்மனை வளாகத்தில் நடந்த யோகா நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்றார். அவருடன் 15 ஆயிரம் பேர் யோகா பயிற்சியில் ஈடுபட்டனர். கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை, மத்திய அமைச்சர் சர்பானந்த சோனோவால் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசும்போது பிரதமர் மோடி கூறியவை வருமாறு:-

நல்ல உடல் நலத்திற்கும், மன நலத்திற்கும் யோகா வழிகாட்டுகிறது. நாள்தோறும் யோகா செய்தால் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும். உலக நாடுகளையும், மக்களையும் யோகா ஒன்றிணைக்கிறது. கொவிட் காலத்தில் நல்ல ஆரோக்கியத்திற்கு வழிகாட்டியது. உலகின் அனைத்துப் பகுதிகளையும் யோகா சென்றடைந்துள்ளது. இந்த ஆண்டின் கருப்பொருள் மனித நேயத்திற்கான யோகா. இந்த நாளில், ஐ.நா. மற்றும் அனைத்து நாடுகளுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

– இவ்வாறு அவர் பேசினார்.

பின், 15 ஆயிரம் பேருடன் இணைந்து, பிரதமர் மோடி யோகா பயிற்சியில் ஈடுபட்டார்.

மேலும், இந்தியா சுதந்திரம் அடைந்து 75 வருட நிறைவையொட்டி இந்தியா முழுவதும், 75 மத்திய அமைச்சர்கள், நாட்டின் 75 முக்கிய நகரங்களில் நடைபெறும் யோகா நிகழ்ச்சியில் பங்கேற்றனர். டெல்லி ஜந்தர் மந்தரில் நடைபெறும் யோகா நிகழ்ச்சிக்கு, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமை தாங்கினார்.



## புதுடெல்லி நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்பு

சர்வதேச யோகா தினம் நேற்று உலகமெங்கும் அனுசரிக்கப்பட்டமையை ஒட்டி புதுடெல்லியில் நடந்த நிகழ்வில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் பங்கேற்றார்.

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக கடந்த 2 ஆண்டுகளாக யோகா தினக் கொண்டாட்டங்கள் சிறப்பாக நடத்த முடியாமல் போனமையால், இந்த ஆண்டு இந்தியாவில் அதைப் பிரமாண்டமாக அனுசரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

டெல்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையான ராஷ்டிரபதி பவனில் யோகா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் பங்கேற்றார்.

“யோகா நமது இந்தியப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும். இது ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான ஒரு முழுமையான அணுகுமுறையாகும். இது நமது மனம், உடல் ஆகியவற்றை சமநிலைப்படுத்துகிறது” என்று அந்நிகழ்வில் பங்குபற்றி உரையாற்றுகையில் அவர் கூறினார் .

## மாலைதீவு யோகா நிகழ்வில் கலவரக்காரர்கள் களேபரம்




நேற்று சர்வதேச யோகா தினத்தையொட்டி மாலைதீவில் நடந்த நிகழ்ச்சியில் கலவரக்காரர்கள் புகுந்து தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் பலர் காயமுற்றனர்.

மாலைதீவில் உள்ள இந்தியத் தூதரகம், இந்திய கலாச்சார மையம் மற்றும் மாலைதீவு இளைஞர் நலத் துறை ஆகியன இணைந்து சர்வதேச யோகா தினத்தை கொண்டாடினர்.

நேற்றுக் காலை 6 மணிக்கு அங்குள்ள கலோலு விளையாட்டு அரங்கில் யோகா நிகழ்வு நடந்துகொண்டிருந்தபோது மாலைதீவு நாட்டைச் சேர்ந்த சிலர் ஆயுதங்களுடன் உள்ளே புகுந்து அங்கு யோகாவில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதலை நடத்தினர். இதில் பலரும் காயமுற்றனர். குறைந்த எண்ணிக்கையில் 10 பொலிஸார் மட்டுமே அங்கு இருந்தமையால் கலவரத்தை உடனடியாகத் தடுக்க முடியவில்லை. பின்னர் ராணுவம் வரவழைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இந்திய தூதரக அதிகாரி முனு மஹாவர், மாலைதீவு இளைஞர் நலத் துறை அமைச்சர் அகமது மகலூப், இந்திய கலாசார அமைப்பின் நிர்வாகி தன்சீர் ஆகியோரும் பங்கேற்றனர்.

இந்தச் சம்பவத்திற்கு இந்தியா கண்டனம் தெரிவிக்க வேண்டும், கலவரம் ஏற்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அங்குள்ளவர்கள் எதிர்பார்க்கின்றனர்.



## இமயமலைத் தொடர்களிலும் நேற்று யோகாப் பயிற்சிகள்

எட்டாவது சர்வதேச யோகா தினத்தையொட்டி, இந்தோ– திபெத்திய எல்லைப் பொலிஸார் வடக்கில் லடாக் தொடங்கி கிழக்கு எல்லைகளில் சிக்கிம் வரையிலான பல்வேறு உயரமான இமயமலைத் தொடர்களில் யோகா பயிற்சி செய்தனர். சர்வதேச யோகா தினத்தன்று அவர்கள் ஒரு பாடலையும் அர்ப்பணித்தனர். லடாக், ஹிமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட இந்திய – சீன எல்லைகளில் உள்ள பல்வேறு உயரமான இமயமலைத் தொடர்களில் உறைய வைக்கும் குளிருக்கு மத்தியில் இந்தோ – திபெத்திய எல்லைப் பொலிஸார் பல ஆண்டுகளாக யோகா பயிற்சி செய்து ஊக்குவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இமயமலையில் 17,000 அடி உயரத்தில் யோகா பயிற்சி செய்யும் இந்தோ – திபெத்திய எல்லைப் பொலிஸாரைப் படத்தில் காணலாம்.

# தனி நபரினதும் அரசியல் கட்சிகளினதும் தேவைக்காகவே அரசமைப்புத் திருத்தம்

## சரத் பொன்சேகா சாடல்



சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதாலும், அரசமைப்பை திருத்தம் செய்வதாலும் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையில் இருந்து மீள முடியாது.

தனி நபரினதும்,அரசியல் கட்சிகளினதும் தேவைக்காக மாத்திரமே அரசமைப்பு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் பாரதூரத்தன்மையை சிறுபிள்ளை கூட நன்கு அறியும்.

சிறு பிள்ளைகளின் வாழ்க்கையிலும் தற்போதைய பொருளாதார பாதிப்பு நேரடியாகத் தாக்கம் செலுத்தியுள்ளது.

பொருளாதார பாதிப்பிற்கு இதுவரையில் ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் ஏதாவதொரு வழிமுறையில் பொறுப்புக்கூற வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் கடந்த இரண்டு வருடகாலமாக செயற்படுத்திய தவறான பொருளாதாரக் கொள்கை பொருளாதார பாதிப்பைத் துரிதமாகத் தீவிரப்படுத்தியுள்ளது.

பொருளாதார நிபுணர்கள் என்று குறிப்பிட்டுக்கொண்ட தரப்பினர் திட்டமிட்ட வகையில் பொருளாதாரத்தை சீரழித்து நாட்டை மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளார்கள். நாட்டு மக்கள் முழு அரச கட்டமைப்பையும் வெறுக்கிறார்கள். 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 50 சதவீதமானோர் தவறான வர்த்தகங்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடுகிறார்கள்.

35 சதவீதமானோர் அவற்றை தவறு என்று தெரிந்தும் தமது அரசியல் இருப்பிற்காக அதனுடன் ஒன்றிணைந்து செயற்படுகிறார்கள்.

15 சதவீதமானோர் மாத்திரம் தவறான அரசியல் செயலொழுங்கினை மாற்றியமைப்பதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொள்கிறார்கள்.இந்த 15 சதவீதமானோரால் மாத்திரமே என்றாவது நாட்டை முன்னேற்ற முடியும்.

சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பது தொடர்பாக தற்போது அதிக கவனம் செலுத்தப்படுகிறது. நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் தமக்கு தேவையானோரின் பெயரை பரிந்துரை செய்து சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதால் மாத்திரம் நாடு எதிர் கொண்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அரசமைப்பு திருத்தம் தொடர்பில் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.இதுவரையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் அனைத்தும் தனி நபர் தேவைக்காகவும்,கட்சியின் தேவைக்காகவும் தான் அரசமைப்பை திருத்தம் செய்துள்ளன. அரசமைப்பு திருத்தம் செய்வதால் மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கப்பெறவில்லை.

சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதாலும்,அரசமைப்பை திருத்தம் செய்வதாலும் நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியில் இருந்து மீள முடியாது.சிறந்த துறைசார் தரப்பினரை ஒன்றிணைத்து புதிய கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.ஊழல் மோசடி,முறைகேடான நிர்வாகம் முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டால் நாட்டை முன்னேற்றமடைய செய்ய முடியும். – என்றார்.



## யோகாதின நிகழ்வில் ரணிலும் பங்கேற்பு!

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நேற்று (செவ்வாய்க் கிழமை) சுதந்திர சதுக்க வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றார்.

இந்திய உயர்தூதரகத்ததால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இந்த யோகா நிகழ்ச்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



## விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தாக்கப்பட்ட இளைஞர்களை சந்தித்தார் சிறிதரன்

முல்லைத்தீவு, ஜூன் 22

முல்லைத்தீவு விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளான இளைஞர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் திங்கட்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள குறித்த இளைஞர்கள், தாங்கள் இராணுவத்தினரால் காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்பட்டோம் என தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினருடன் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதனும் சென்றிருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரச்சினைகளுக்கு தீர்வுகாண பிரதமர் ரணிலினால் முடியாது!

## மைத்திரி திட்டவட்டக் கருத்து



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளேன். அவரால் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது.

நாட்டின் தற்போதைய அவல நிலைமையைக் கண்டு பெரும் மன வேதனையடைகிறேன். சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து புதிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பது சகல தரப்பினரதும் பிரதான கோரிக்கையாக உள்ளது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காரியாலயத்தில் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாட்டின் தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மற்றும் புதிய அரசாங்கம் ஸ்தாபிப்பு தொடர்பாகத் துறைசார் நிபுணர்கள்,சிவில் அமைப்பினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் யோசனைகளை முன்வைத்துள்ளார்கள்.

தற்போதைய அரசாங்கத்தை கலைத்து சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து புதிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பது அனைத்து தரப்பினரதும் பிரதான கோரிக்கையாகவுள்ளது.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து ஸ்தாபிக்கப்படும் சர்வகட்சி அரசாங்கத்தின் ஊடாகத் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கப் பெறும்.

சர்வகட்சி அரசாங்கத்துக்கு சகல தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். இந்த விடயம் தொடர்பாக அனைத்து தரப்பினருடனும் விரிவுபடுத்தப்பட்ட பேச்சு முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

இந்த அரசாங்கத்தைக் கலைத்து புதிய அரசாங்கத்தை ஸ்தாபிக்காவிடின் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது. வாகனத்துக்கு உதிரிப் பாகங்களை இணைப்பதைப் போன்று ஒவ்வொரு தரப்பில் இருந்து ஒருசிலரை எடுத்து அரசாங்கத்தை ஸ்தாபிப்பதால் எவ்வித சாதகமான தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியாது. புதிய அரசாங்கத்தின் ஊடாக மாற்றம் ஏற்படுத்த வேண்டும்.

நாட்டின் தற்போதைய நிலைமையில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவது வரவேற்கத்தக்கது. மக்கள் பக்கம் இருந்து யோசனைகளை முன் வைத்துள்ளோம்.அரசாங்கத்தின் பக்கமிருந்து செயற்படவில்லை.

அரச சேவை ,தனியார் துறை,விவசாயிகள்,தொழிலாளிகள்,தோட்டத் தொழிலாளிகள் உட்பட உழைக்கும் வர்க்கத்தினர் சகலரும் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

நாட்டின் தற்போதைய அவலநிலைமையைக் கண்டு பெரும் மனவேதனையடைகிறேன். விவசாயிகளின் பாதிப்பு முழு பொருளாதாரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளேன்.அவரின் செயற்பாடுகளை நன்கு அறிவேன் தற்போதைய அரசாங்கத்தினால் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது.

சர்வகட்சிகளையும் ஒன்றிணைத்து இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பது அவசியமானது. – என்றார்.

# பிரதமர் ரணிலை பதவியிலிருந்து நீக்கி சர்வகட்சி அரசை ஸ்தாபிக்க வேண்டும்

## வாசுதேவ வலியுறுத்து

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து நீக்கி சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஜனாதிபதி சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும், இல்லாவிடின் ஜனாதிபதி பதவி விலக வேண்டும்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையைக் கருத்திற் கொண்டு சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இடதுசாரி ஜனநாயக முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பதவியில் இருக்கும் வரை சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க முடியாது. பிரதமர் பதவி விலக வேண்டும், இல்லாவிடின் ஜனாதிபதி பிரதமரை பதவி நீக்க வேண்டும்.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து சகல தரப்பினரது இணக்கப்பாட்டிற்கமைய பிரதமரை நியமித்து சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும்.

இதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவிக்க வேண்டும். சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்காவிடின் ஜனாதிபதியும் பதவி விலக வேண்டும்.

சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க முதலில் அரசியல் கட்சிகள் அனைத்தும் முதலில் ஒன்றிணைய வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 10 அரசியல் கட்சிகள், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, 43ஆவது படையணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட சிரேஷ்ட அரசியல்வாதிகள் அனைவரும் முதலில் ஒன்றிணைய வேண்டும்.



சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதைத் தவிர்த்து தற்போது மாற்று வழியேதும் கிடையாது. சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தடையாக உள்ளார்.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும். ஆனால் தற்போதைய நிலையில் அவரும் அவசியம் சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு. – என்றார்.



# தேர்தலை நடத்துவதால் டொலருக்கு தீர்வு இல்லை!

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு மத்தியில் தேர்தலை நடத்தும் பட்சத்தில் மேலும் ஸ்திரமற்ற நிலைமையே ஏற்படும். தேர்தலை நடத்துவதால் டொலர் நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது.

எனவே இப்போது தேர்தலுக்குச் செல்லுமாறு வலியுறுத்துவது பொருத்தமற்ற செயற்பாடாகும் என்று விமான சேவைகள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கத்தின் ஊடாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியவில்லை. எனில் , தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் -

தேர்தலுக்குச் செல்வதால் நாடு ஸ்திரமடையும் எனக் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தேர்தலுக்குச் சென்றால் நாடு மேலும் ஸ்திரமற்ற நிலைமைக்கே செல்லும்.

தற்போது எம்மால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது ஸ்திர அரசாங்கமாகும். ஆனால் அரசாங்கத்துக்கு பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

எனவே நாளை பிரதமர் மாற்றப்படுவதாலேயோ அல்லது அரசாங்கம் மாற்றப்படுவதாலேயோ நாட்டுக்கு டொலர் கிடைக்கக் கூடிய வழிமுறை ஏதேனும் காணப்படுகிறதா? மக்கள் விடுதலை முன்னணிக்கும் , ஐக்கிய மக்கள் சக்திக்கும் டொலரைக் கொண்டு வர முடியுமா? அவ்வாறெனில் அவர்களுக்கு பொறுப்பை ஏற்று செயற்பட முடியுமல்லவா? தேர்தலை நடத்தி அதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற நிலைப்பாட்டுடன் என்னால் இணங்க முடியாது. - என்றார்.

# சாய்ந்தமருதில் எரிபொருள் விநியோகத்தில் முறைகேடு!

## பிரதேச செயலாளரிடம் தீர்வை கோரும் மக்கள்

சாய்ந்தமருது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முறைகேடாக எரிபொருள் விநியோகம் நடைபெறுவதாகவும் இந்த விடயங்களில் பிரதேச செயலகம் பாராமுகமாக இருப்பதாகவும் தெரிவித்து சாய்ந்தமருது இளைஞர்கள் தலைமையிலான குழுவினர், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக்கை அலுவலகத்தில் சந்தித்தனர்.

எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருந்தோரே இந்த எரிபொருள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இரவு நேரங்களில் முறைகேடாக எரிபொருள் வழங்கப்படுவதாகவும், பாதுகாப்புக்கு நிற்கும் பாதுகாப்புப் படையினர் இந்த செயலுக்கு துணைபோகின்றனர் எனவும் இவர்கள் குறிப்பிட்டனர்.

பொதுமக்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு ஒரு முறையான பொறிமுறையை உருவாக்குமாறும், இந்த விடயத்தை கையாள முடியுமான உதவிகளை வழங்க தாங்கள் தயாராக இருக்கிறோம் எனவும் இவர்கள் தெரிவித்தனர். நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை எரிபொருள் கேட்டும் எரிபொருள் வழங்கப்படாமையால் நீர் விநியோகம் தடைப்பட்டிருந்ததாகவும் இவர்கள் பிரதேச செயலாளருக்கு சுட்டிக்காட்டினர்.

இதுதொடர்பாக நிறைய விடயங்களை கலந்துரையாடிய சாய்ந்தமருது பிரதேச செயலாளர், இவற்றுக்கு முறையான தீர்வொன்றைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கிறேன் எனவும், முறைகேடுகள் இடம்பெறுவதை ஆதாரத்துடன் சமர்ப்பிக்குமாறும் பொதுமக்களைக் கேட்டுக்கொண் டார்.

# போர்க் காலத்தில் புதைக்கப்பட்ட 7 பரல் மண்ணெண்ணெய் மீட்பு



போர் நடைபெற்ற காலப்பகுதியில் புதைக்கப்பட்ட 7 பரல்களில் 715 லீற்றர் மண்ணெண்ணெய் முல்லைத்தீவு உடையார் பகுதியில் அமைந்துள்ள தனியார் காணி ஒன்றில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தோட்டம் செய்வதற்காக உரிமையாளரால் காணியை கனரக இயந்திரம் மூலம் பண்படுத்தப்பட்டபோதே நிலத்தில் புதைக்கப்பட்ட பரல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த சம்பவம் தொடர்பாக நீதிமன்றில் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமையை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கமைய குறித்த பகுதியை தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மே 9 இல் போராட்டக்காரர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லையாம்!

## ஒப்புக்கொண்டது பொலிஸ் தரப்பு

கோட்டா கோ கம மீது கடந்த மே 9 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலின் போது பொலிஸார் போராட்டக்காரர்களைப் பாதுகாக்கத் தவறியமையை நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) கோட்டை பொலிஸார் மற்றொரு வழக்கின் போது ஒப்புக்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகம் முன்பாக கைது செய்யப்பட்ட 21 ஆர்ப்பாட்டக்காரர்களை கோட்டை நீதிமன் றில் ஆஜர் செய்தபோது மன்றில் ஆஜராகி விடயங்களை முன் வைத்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் தில்ருக் இந்த விடயத்தை வெளிப்படுத்தினார்.

கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு கடந்த மே 9 ஆம் திகதி தவிர்ந்த ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஒத்துழைப்பு வழங்கி செயற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். ஆர்ப்பாட்ட கலத்தில் சுகவீனமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வது முதல் அங்கு திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் உள்ளிட்டவற்றை தேடிக் கண்டுபிடிப்பது உள்ளிட்ட பல ஒத்தாசைகளை பொலிஸார் போராட்டக்காரர்களுக்கு வழங்கியுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

# பசுமை இயக்கத்தின் இராசதானியத் திட்டம் வலி.வடக்கு அளவெட்டியிலும் முன்னெடுப்பு









தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இராசதானியத் திட்டத்தின் கீழ் அளவெட்டியில் விவசாயிகளுக்குத் தானியங்களை வழங்கியுள்ளது.

நாட்டில் நிலவுகின்ற கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக விரைவில் உணவுப்பஞ்சம் ஏற்படலாமென பல்வேறு தரப்பினரும் எச்சரித்து வருகின்றனர்.

இதற்கு முகங்கொடுக்கும் விதமாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தமிழ் மக்களின் உணவுப் பண்பாட்டில் இருந்து வழக்கொழிந்து போய்க்கொண்டிருக்கும் சிறு தானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் இராசதானியம் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

சிறுதானியங்களை மீள முடிசூட்டுவோம் என்ற தொனிப்பொருளுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தத் திட்டத்தின் தொடர்ச்சியாகவே அளவெட்டியில் கடந்த திங்கட்கிழமை விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் விவசாயச் சம்மேளனத்தின் தலைவர் வை. சின்னப்பு தலைமையில் விதைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இந்தத் திட்டத்தின் நோக்கம் தொடர்பாக விளக்கமளித்தார். ஓய்வு நிலைப் பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தானியங்களின் செய்கைமுறை பற்றி விளக்கமளித்ததோடு விவசாயிகளின் சந்தேகங்களையும் தெளிவுபடுத்தினார். இந்நிகழ்ச்சியில் அளவெட்டி மற்றும் அயற் கிராமமான மல்லாகம், கல்லாரையைச் சேர்ந்த 25 விவசாயிகளுக்குக் குரக்கன், வரகு, பயறு, காராமணி விதைகள் உடனடி விதைப்புக்கென வழங்கப்பட்டன.

வழங்கப்படும் விதைகளின் எடையின் இரட்டிப்பு மடங்கு விதைகளைச் சுழற்சிமுறையில் வேறு விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு அறுவடையின் பின்னர் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்திடம் கையளிக்க வேண்டும் என்ற உடன்படிக்கையின் அடிப்படையில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுவதும் விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவதற்குத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தேவையான ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கும் என்ற உத்தரவாதத்தை வழங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# டொலருக்கு எரிபொருள் விநியோகம்; பொதுஜன பெரமுனவினர் பரிந்துரை

வெளிநாட்டுநாணயத்தைப்பயன்படுத்திஎரிபொருள் கொள்வனவு செய்வதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் திறக்குமாறு அரசாங்கத்திடம் கோரப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவிடம் கடிதம் மூலம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்நடவடிக்கையானது நாட்டில் தற்போது மறைத்து வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயங்களை வெளிக்கொண்டு வருவதோடு அந்நிய செலாவணி நெருக்கடிக்கு நன்மை பயக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருளுக்கு வெளிநாட்டு நாணயத்தின் மூலம் பணம் செலுத்த அனுமதிக்கும் குறிப்பிட்ட எரிபொருள் நிலையங்களை ஒதுக்குவதன் மூலம் தேவையான டொலர்களை சேகரிக்க முடியும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக பலர் வெளிநாட்டு நாணயங்களை மறைத்து வைத்திருக்கின்றனர் என கூறிய அவர், இந்த நடவடிக்கை அதை வெளிக்கொண்டு வர உதவும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# லொறியில் இருந்து வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் மரணம்

புத்தளம், மாதம்பை – கச்சக்கட பகுதியில் லொறியில் இருந்து கீழே வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கல்முறுவ, கச்சக்கடுவ பகுதியைச் சேர்ந்த 31வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபருக்கும், லொறியின் சாரதிக்கும் இடையே நேற்றுக் கடும் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபரின் வீட்டுக்கு முன்பாக இந்த வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முடிவடைந்த பின்னர் குறித்த லொறியின் சாரதி, கோபத்துடன் அங்கிருந்து செல்ல முற்பட்டபோது உயிரிழந்த நபர் அந்த லொறியின் பின்பகுதியைப் பிடித்துக்கொண்டு ஏற முற்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இதன்போது, குறித்த லொறி அவ்விடத்தில் இருந்து புறப்பட்டு சுமார் 100 மீற்றர் தூரத்தில் லொறியின் பின்பக்கத்தில் இருந்த நபர் கீழே வீழ்ந்துள்ளார் என மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது, கீழே வீழ்ந்து படுகாயமடைந்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாகக் கல்முறுவ வைத்தியசாலையில் சேர்த்த போதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மாதம்பைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த பீடி இலைகள் பொலிஸாரால் பறிமுதல்



தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற 17 லட்சம் ரூபா பீடி இலைகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு சமீப காலமாக மஞ்சள், பீடி இலை, போதைப்பொருள்கள், களைக் கொல்லி மருந்து உள்ளிட்டவை கடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தூத்துக்குடி தருவைகுளம் அருகே உள்ள கடற்கரையில் இருந்து இலங்கைக்கு பீடி இலை கடத்தப்படுவதாக தூத்துக்குடி மாவட்ட கியூ பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து பொலிஸார் இரகசிய கண்காணிப்பில் ஈடுபட்டபோது, சந்தேக சபர்கள் படகிலிருந்து குறித்த பீடி இலை மூடைகளை கடலில் தூக்கிவீசிவிட்டு, தப்பித்துச் சென்றுள்ளனர்.

இதில், மொத்தமாக 38 மூடைகள் காணப்பட்டன எனவும் ஒவ்வொரு மூடையிலும் சுமார் 45 கிலோ எடை கொண்ட பீடிஇலைகள் இருந்தன எனவும், மொத்தமாக 1,700 கிலோ பீடி இலைகள் இருந்தன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் இலங்கை மதிப்பு சுமார் 17 லட்சம் ரூபா என்றும் கூறப்படுகிறது.

மேலும், தப்பிச் சென்ற சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேலியகொடை – மெனிங் சந்தையில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் உயிரிழப்பு!

பேலியகொடை - மெனிங் சந்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் 42 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# காலில் முள் குத்தி சிகிச்சை பெற்ற இளைஞன் யாழ்ப்பாணத்தில் சாவு!

காலில் முள் குத்தியதாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞன் ஒருவர் சிகிச்சை பலனின்றி திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 28 வயதுடைய தருமராசா மதிகரன் எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் காலில் முள் ஒன்று குத்தியதாகவும், அந்த இடத்தில் வலி ஏற்பட்டு உள்ளதாகக் கூறி வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த நிலையிலேயே அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# சர்வதேச காணி தினத்தை முன்னிட்டு ஹற்றனில் நேற்று ஆர்ப்பாட்டப்பேரணி!







சர்வதேச காணி தினத்தை முன்னிட்டு, ஹற்றன் நகரில் ஆர்ப்பாட்டமொன்று நேற்று (செவ்வாய்க் கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் கலை, கலாசார விழுமியங்களை உள்ளடங்கி நிலமற்றோருக்கான நிலம் எனும் தொனிப்பொருளிலேயே இந்த ஆர்ப்பாட்டப்பேரணி முன்னெடுக்கப்பட்டது.

ஹற்றன் மல்லிகைப்பூ சந்தியில் ஆரம்பித்த மேற்படி பேரணி ஹற்றன் சாரதா கலாசார மண்டபம் வரை சென்றது.

இதன்போது மலையக மக்களுக்கு விவசாயக் காணி வழங்க வேண்டும் என்றும், வீடு கட்ட 20 பேர்ச் காணி கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி பதாதைகளை ஏந்தியும் கோஷமெழுப்பியும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன.

மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வுக்கு தெனியாய, மாத்தளை, பதுளை, நுவரெலியா போன்ற பகுதிகளை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர்கள், ஆய்வாளர்கள் என பல்வேறு பிரிவினரும் கலந்து கொண்டிருந்தனர்.

மலையக மக்களின் கௌரவமான வாழ்வுக்கும், வாழ்வாதாரத்துக்குமான காணி உரிமையை உறுதி செய்வதன் மூலம் எமது தேசத்தின் அபிவிருத்தியை பலப்படுத்தி நாட்டின் தேசிய நீரோட்டத்தில் பங்குகொள்வதை உறுதி செய்வோம் என இதன்போது போராட்டக்காரர்களால் வலியுறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# தாயக உணர்வுகளுடன் நடந்தேறிய சுவிஸ் கதிர்வேலன் பெருந்திருவிழா









ஐரோப்பாவில் பிரபல்யமாக விளங்கும் சுவிட்ஸர்லாந்து செம்மாக்கிறேத்தன் பதியில் எழுந்தருளி வேண்டுவற்றை எல்லாம் வாரி வழங்கும் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் இவ்வாண்டுக்கான பெருந்திருவிழா சிறப்பாக நடந்தேறியுள்ளது.

கொவிட் 19 நோய் பரம்பலால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக கடந்த இரு வருடங்கள் மட்டுப்படுத்த அளவில் இந்தத் திருவிழா நடைபெற்றது.

இவ்வாண்டு கொவிட் 19 கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட நிலையில் பெருந்தொகையான பக்தர்களின் பங்களிப்புடன் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமானது. ஆலய பிரதம குருவும் மதுரை மீனாட்சி ஆலய குருவுமான சிவகமரத்தினா சிவஸ்ரீ முத்து மீனாட்சி சுந்தரம் முத்துசாமி சிவாச்சாரியார் அவர்களுடன் தியாக புஸ்பானந்த குருக்கள் ஜேர்மன் ஈஸ்வரக் குருக்கள் குருமணி சிவஸ்ரீ சந்தானம் குருக்கள் (புன்னாலைக்கட்டுவன் ) அத்துடன் ஐரோப்பா வாழ் அந்தணர்கள் வைபவ ரீதியாக கொடியை ஏற்றி வைத்தனர்.

திருவிழாவின் தொடர்ச்சியாக முதலாம் நாள் உற்சவத்தில் ஜோதிரூப காட்சியாகவும் இரண்டாம் நாள் சட்கோணக்காட்சியாகவும் 3 ஆம் நாள் சக்திரூப காட்சியாகவும் 4ஆம் நாள் குருந்தமரக்காட்சியாகவும் கதிர்வேலர் வலம் வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி தந்தார்.

5ஆம் நாள் உற்சவத்தில் கப்பல் வாகனத்தில் கதிர்வேலர் வலம் வந்தார்.

6ஆம் நாள் மாம்பழத்திருவிழா கதிர்வேலர், பிள்ளையார், சிவன் சகிதம் வலம் வந்தனர்.

7ஆம் நாள் வேட்டைத்திருவிழாவும் 8ஆம் நாள் சப்பறத்திருவிழாவும் 9ஆம் நாள் தேர்த்திருவிழாவும் 10ஆம் நாள் தீர்த்த திருவிழாவும் இடம்பெற்றன.

11ஆம் நாள் திருக்கல்யாணம் பூங்காவனமும் வைரவர் மடையுடன் நிறைவேறியது.

தேர்த்திருவிழாவில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஒன்றுகூடி வடம் பிடித்து தேரை இழுத்து வந்தனர்.

பக்தர்கள் காவடி எடுத்தும் பிரதட்சணை செய்தும் அடி அழித்தும் கற்பூரச்சட்டி ஏந்தியும் தமது நேர்த்திக் கடன்களை பூர்த்தி செய்தனர்.

தேர்த்திருவிழா அன்று தாயக இசை அமைப்பாளர் முகிலரசன் குழுவினரின் இசை சங்கமம் நிகழ்வு இடம்பெற்றது.

வெண்மயில் வாகன கதிர்வேலன் என்ற இறுவெட்டும் வெளியிடப்பட்டது.

ஜேர்மனியிலிருந்து வருகை தந்த ஜெகதீசன் சர்மா, சுவிஸ் நாட்டை சேர்ந்த சந்திரன் குருக்கள், திருவிழா சிறப்பாக நடைபெற உதவினர்.

தாயகத்தில் இருந்து வருகை தந்த நாதஸ்வர வித்துவான்களான சுவிஸ் நாட்டில் உள்ள இந்திரன் குழுவினருடன் இணைந்து 10 நாள் உற்சவத்திலும் இசை மழை பொழிந்தனர்.

ஆலய நிர்வாகக்குழு தலைவர் வேலுப்பிள்ளை கணேசகுமார் தலைமையில் செயலாளர் சிறி பொருளாளர் சதா அற்புதராசா, உப தலைவர் மகாலிங்கம் உட்பட ஆலய நிர்வாகத்தினர் திருவிழாவுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-42

**காலிமுகத் திடல் போராட்டத்தின் தார்மீகம்**

நாட்டின் அடிப்படைப் பிரச்சினையே, பேரினவாத அரசியல்வாதிகள் இனப் பிரச்சினையை வளர்த்து, தங்களை மக்களுக்குத் தாங்கள் எந்தப் பொறுப்பும் கூறத் தேவை இல்லாதவர்களாக அரசமைப்பு சட்டங்களை இயற்றி, அரசாங்கத்தை அப்படியான பொறுப்புகளிலிருந்து விலக்கி, அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டு வந்தமைதான்.

தமிழ் மக்கள் நாட்டைப் பிரித்து விடுவார்கள் என்ற பயத்தைக் காட்டி, அதனால் அரசாங்கம் செய்வது எல்லாம் நியாயம், தட்டிக் கேட்கக் கூடாதவை என்ற மனோபாவத்தை மக்களுக்கு ஊட்டி, நிர்வாக அலகுகள் எல்லாம் – ஏன் நீதித்துறை கூட – அப்படியான பயங்களைக் கணக்கெடுத்து, உள்வாங்கித்தான் பரிபாலனங்கள் செய்தார்கள.

தமிழ் மக்களுக்கும், பின்னர் முஸ்லிம்களுக்கும் எதிரான வன்முறைகளும் அட்டூழியங்களும் அவற்றிற்காக வாரி இறைக்கப்பட்ட பெருவாரி பணமும் இப்படித்தான் மக்களுக்குப் பேய்க் காட்டப்பட்டன.

தற்சமயத்தில் நடைமுறையிலிருக்கும் அரசமைப்பின் சரத்துக்கள் கூட நாடாளுமன்றம் ஊழலுக்கு எதுவிதப் பொறுப்பும் கூற தேவையற்றது என்ற கருத்துக்களையே கொண்டுள்ளது.

நாட்டில் நடந்த மிகப் பெரிய ஊழல் மத்திய வங்கியின் பிணைமுறி ஊழல் தான். இதில் ரணிலுடன் அவரது அரசும் குற்றம் சாட்டப்பட்டது. கடைசியில் நடந்தது என்ன? நாடாளுமன்றக் குழு ஒன்று பிணைமுறி விவகாரத்தை விசாரித்துக் கிடப்பில் போட்டு அரசாங்கத்தை பொறுப்புக்கூற தேவையற்றதாக்கியுள்ளது. அப்போது பிரதமராக இருந்த ரணிலின் அரசியல் கட்சியும் அவரும் கூட ஓர் ஆசனத்தைத் தன்னும் மக்களிடமிருந்து தேர்தலில் பெற்றுக்கொள்ள முடியாமல் போயிற்று. இப்போது தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமனறுக்குள் நுழைந்து அவர் பிரதமராகி உள்ளார். மக்கள் எவ்வளவுதான் ஆவேசப்பட்டாலும் ராஜபக்ஷக்களின் ஊழல்கள் கூட இதே பாதையில்தான் கடைசியில் போய் முடியும்.

ஒரு சுதந்திரமான, சர்வதேச அடிப்படைகளில் அமைந்த விசாரணைகள் நடைபெறாத வரை இத்தகைய ஊழல்கள் எல்லாம் கடலில் போட்ட கற்களாகவே இருக்கும். இந்த அரசியல் சாக்கடையில் ஊறியவர்கள்தான் இன்று இருக்கும் பெரும்பான்மையின் அரசியல் தலைவர்கள்.

அத்தியாவசியப் பொருள்களின் தேவைகளால் காலிமுகத்திடல் போராட்டத்துக்கு இறங்கிய இளைஞர்களில் பலர் 1956 தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பொழுதோ, 1958 கலவர காலங்களிலோ, 1977 காலங்களிலோ, பயங்கரவாத தடைச்சட்டம் உருவாக்கப்பட்ட1978 காலங்களிலோ, 1983 கலவரக் காலங்களிலோ பிறந்து வளர்ந்தவர்கள் அல்லர். அந்தக் காலங்களில் வளர்ந்தோ அல்லது பின் அவற்றை சுயாதீனமான முறையில் படித்தோ விளங்கிக் கொண்டவர்களும் அல்லர். அரசாங்கங்கள் – பேரினவாதிகள் – ஊட்டியவற்றை விழுங்கிக் கொண்டவர்கள்தான் அவர்கள்.

சமகால அரசியல் நடப்புகளில் அக்கறை செலுத்தியவர்கள், தங்களது நாட்டின் எதிர்காலத்திலும் அக்கறை கொண்டவர்கள், இவர்களுடன் இந்தப் போராட்டத்தில் பின் இணைந்த புத்திஜீவிகள் நடந்தவற்றை பற்றி விளக்கங்கள் தந்து, அரசியல்வாதிகள் தங்கள் சுயநல போதனைகளில் தந்த பயங்களின் காரணமாக மக்கள் இவற்றை ஏற்றுக் கொண்டு போனார்கள் என்ற உண்மை ஒளிக்கீற்றை அவர்களின் முன்னால் பற்ற வைத்தார்கள்.

காலிமுகத்திடலில் எந்த அரசியல் பக்கத்திற்கு ஆதரவு இருந்தாலும் – எதிர்ப்பும் மறுப்பும் காட்டாது மற்றவர்கள் கூறுகின்ற கருத்துக்களையும் கேட்டு கிரகித்து ஆராய்தல் வேண்டும் என்ற ஒரு பண்பு முதன் முதலில் விதைக்கப்பட்டு, முளைத்து வளர்ந்து பின் நாடளாவிய ரீதியில் பரந்தது.

இந்தப் பண்பும் விழுமியமும் 1956 இல்தமிழ்மக்கள்அதேகாலிமுகத்திடலில் இருந்தபோது அந்தத் தென்னிலங்கை மக்களிடம் இருக்கவில்லை.

சுதந்திரம்அடைந்தநாள்களிலிருந்து அரசியலில் ஏற்பட்ட பாரிய வெற்றியும், நெறியும், பண்பும் இதுதான்.

இதற்கு முந்திய கால தவறான வளர்ச்சியில் இருந்து பிறந்ததுதான் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை வேற்றாக நடத்தும் முறைமை. அரசியல்வாதிகளின் உண்மையான நோக்கங்களைப் புரிந்து கொள்ளவில்லை மக்கள். ஆதலால், பெரும்பான்மையினர் முன்வந்து சிறுபான்மையினரின் கோரிக்கைகளை உணர்ந்து, அவர்களையும் நாட்டு மக்களாக உள்வாங்கி முன்னேறவேண்டும் என்ற உணர்வுகள் ஏற்படுத்தப்படவில்லை.

அரசியல்வாதிகள் தாங்கள் மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்று கருத்தியலில் அரசமைப்புகளை உருவாக்கவில்லை. மக்கள் மீது எப்படி அதிகாரங்கள் செலுத்தலாம் என்றும், நிறைவேற்று அதிகாரங்கள் மேலாதிக்கம் செலுத்தலாம் என்றும் மட்டுமே கருதிச் செயற்பட்டனர். நீதிமன்றங்கள் கூட அந்த அரசியல்வாதிகளுக்கு கட்டுப்பட்டுத்தான் இயங்குகின்ற கோலம் இருந்தது. ஆதலால் இந்த முறைகளையே அடிப்படைகளில் இருந்து மாற்றி, நாட்டு மக்கள் யாவருக்கும் பொறுப்பு கூற வேண்டியதான அரசமைப்புகள் அமைய வேண்டுமென இப்போது போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

இந்த குழப்பங்களுக்கு எல்லாம் பிதாக்களாக, பிதாமகர்களாக இருந்த முற்றுமுழுதான அரசியல்வாதிகளை வெளியேற்றி, புதிய சமுதாயம் மலர வேண்டும் என்ற இலட்சியத்தில் அவர்கள் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களது இலட்சியத்தில் மலரக் கூடிய அரசுக்கு மக்களிடையே விழிப்புணர்வு இருந்தாலும், அவை உடனடியாக நிறைவேறப் போவதில்லை. அப்படியான தொன்று அமைய அதிகாரத்திலுள்ள பெருச்சாளிகள் விடப்போவதில்லை.

சம்பந்தன், சுமந்திரன் கூட அப்படி அடிப்படை நிர்வாக அளவுகளை மாற்றித்தீர்வுதரும் அரசியல் மாற்றத்துக்கான தேர்தலைக் கேட்கவுமில்லை. அவர்கள் அப்புகாமிக்குப் பதிலாக புதிதாய் புஞ்சிகாமியைக் கொண்டு வந்து இன்னும் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வில்லை என்ற அரசியலைச் செய்யவே விரும்புகிறார்கள். இந்தத் தொடர்ந்த அணுகுமுறை எங்கே கொண்டு செல்லும் என தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.

ஆட்சி மாற்றம் இடம்பெறவேண்டும் என்ற சம்பந்தனின் செய்திகளுக்கு எதிராக அமெரிக்காவில் இருந்து இயங்கும் புலம்பெயர் தமிழர்களின் செய்திகள் (Tamil Diaspora News) ஆட்சி மாற்றத்தைத் தமிழர்கள் ஆதரிக்கக் கூடாது, இந்தப் பொருளாதார நெருக்கடியின் மூலம் தமிழ் இறையாண்மையை உருவாக்கக் கோட்டாபயவைக் கட்டாயப்படுத்தலாம் என்றும், தமிழர்களுக்கு அரசியல் சுதந்திரம் கிடைக்க பொருளாதார முற்றுகைக்கு தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்தார், இப்போது இது இறைவன் அருளால் நடக்கிறது, இந்த வாய்ப்பைப் பயன்படுத்துங்கள், கோட்டாவை ஆட்சியில் வைத்திருப்பது தமிழர்களுக்கு மிகத் தேவையானது எனவும் அறிவுறுத்தல்கள் தருகிறார்கள்.

தாங்கள் இயங்கிவரும் அமெரிக்கா தமிழ் இறையாண்மையை – ஒரு தனி நாடாக இறையாண்மையை – பெற்றுத் தரும் என்ற உறுதிமொழியைக் கொண்டு இதனைச் சொல்கிறார்களா? அல்லது அவர்கள் எண்ணங்களில் பொருளாதார சிக்கலில் இருந்து மீளமுடியாமல் கோட்டாபய ஒரு காலை விழித்துக் கொண்டு தான் தமிழ் மக்களின் இறையாண்மையைத் தருகிறேன், உதவி செய்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்டுக் கொடுங்கள் என கேட்பார் என நினைத்து அவரைப் பதவியில் வைத்திருக்க அறிவுறுத்துகிறார்களா? தெரியவில்லை. பாதைகள் அவர்களுக்கே வெளிச்சம்.




(வளரும்)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=